RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்



DOI: 10.34256/irjt224s259

OPEN ACCESS

# மீள்பார்வை நோக்கில் மலசர் பழங்குடிகளின் சமூகப் பண்பாட்டு இயங்கியல் பதிவுகள்

**ச. கல்பனா [அ, *], க. கலாவதி [அ]**

[அ] தமிழ்த்துறை, அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம், கோயம்புத்தூர் - 43 தமிழ்நாடு, இந்தியா

# Review on Socio-Cultural Dialectical Records of Malasar

**S. Kalpana [a, *], K. Galavathy [a]**

[a] Department of Tamil, Avinashilingam Institute for Home Science and Higher Education for Women, Coimbatore-43, Tamil Nadu, India

* Corresponding Author: kalpanaabimanyu@gmail.com

Received: 08-08-2022
Revised: 20-10-2022
Accepted: 06-11-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

In the state of Tamil Nadu, there are many tribes. In particular, Malasar tribal people are located in and around area's of Pollachi, Anaimalai, and Kinathukkadavu taluks of Coimbatore district. Malasar people are categorized as Schedule Tribes. In recent studies, the Scholars and Researchers have examined the living conditions of the Malasar Tribes through Folklore, Anthropology, Sociology and Botany. At present, the Language of Malasars are undefined which may result in the destruction of their cultural aspects. Even after 75 years of India's independence, the Malasar tribes continue to struggle for livelihood in the absence of basic rights. Rights-based comprehensive studies and democratic debates with scientific data to ensure socio-economic development and cultural recovery of Malasar tribes should be enhanced at its level.

**Keywords:** Malasar Tribes, Malasar Pathy, Anthropology, Socioeconomic, Malasar Language

## முன்னுரை

தென்னிந்தியாவின் தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்களில் மலசர் பழங்குடிகள் வாழ்ந்து வருகின்றனர். தமிழ் நாட்டில் வாழும் மலசர் பழங்குடிகளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை அமைகின்றது. தமிழ்நாட்டில் வாழும் மலசர் பழங்குடிகள் குறிஞ்சி, மருதம் என்ற இரு வேறுபட்ட நிலப் பிரிவுகளைச் சேர்ந்தவர்களாக இருக்கின்றனர். ஆனைமலை வட்டார, மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளைச் சேர்ந்த மலசர்கள் குறிஞ்சி நிலத்தவர்களாகவும் பொள்ளாச்சி மற்றும் கிணத்துக்கடவு வட்டாரங்களின் கிராமங்களைச் சேர்ந்த சமவெளி மலசர்கள் மருத நிலத்தவர்களாகவும் வாழ்வியல் சூழல்களைக் கொண்டுள்ளனர். மலசர் பழங்குடிகள் 'பதி' என்று கூடி வாழும் தங்கள் குடியிருப்பு பகுதியைக் குறிப்பிடுகின்றனர். மலசர் குடியிருப்புப் பகுதிகளான பதிகள் பெரும்பாலும் குடிநீர், மின்சாரம், கழிப்பறை, இணைப்பு சாலை போன்ற வசதிகளின்றி இருக்கின்றன. பழங்குடிகள் என்று சான்றிதழ் பெறுவதில் சமவெளி மலசர் பழங்குடிகள் பல்வேறு இடர்பாடுகளைச் சந்திக்கின்றனர் ஆகையால், கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் அரசியல் பங்கேற்புகளில் தங்களின் பிரதிநிதித்துவத்தை இழந்து வருகின்றனர். மலசர் பழங்குடிகளின் சமூகப் பண்பாட்டு இயங்கியல்சார் பதிவுகளை மறுவாசிப்புக்கு உட்படுத்தி மதிப்பாய்வு செய்வதன் மூலம் மலசர் பழங்குடிகளின் வளர்ச்சியை மையமிட்ட ஆய்வுக் கண்ணோட்டங்களைக் கண்டறிய முடியும் விளக்க முறை (Descriptive

Review) மற்றும் விமர்சன முறைகளில் (Critical Review) மலசர் பழங்குடிகளின் சமூகப் பண்பாட்டியங்கியல் பதிவுகள் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.

## முதன்மைப் பதிவுகள்

Castes and Tribes of Southern India (1909) என்ற நூலில் தென்னிந்திய பழங்குடிகளின் வாழ்வியலை ஆவணமாக்கிய எட்கர் தர்ஸ்டன் முதன் முதலில் மலசர் பழங்குடிகளின் வாழ்வியல் பற்றிய செய்திகளைப் பதிவு செய்துள்ளார்.

மலசர் குடியிருப்புகளின் அமைப்பு, பதிகள் பற்றிய செய்தி, மலசர்களின் திருமணச் சடங்குகள், இறப்புச் சடங்குகள், வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள் குறித்து தர்ஸ்டன் இந்நூலில் பதிவு செய்துள்ளார். மலசர்களோடு மலை மலசர்கள் பற்றியக் குறிப்புகளையும் இணைத்துப் பதிவு செய்துள்ளார் மலசருக்கும் மலை மலசருக்கும் இடையே உள்ள வாழ்வியல் வேறுபாடுகளையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

"காட்டு யானைகளைப் பிடித்து பழக்கும் பணியினையும் மலசர் மேற்கொள்கின்றனர்" என்று தர்ஸ்டன் பதிவுசெய்துள்ள குறிப்பு முக்கியமான ஒன்றாகும் (Edgar Thurston, 1909). ஆனைமலை புலிகள் காப்பகத்தின் உலாந்தி வனச்சரகத்தில் அமைந்துள்ள கோழிகமுத்தி யானைகள் காப்பகத்தில் உள்ள யானைகளைப் பராமரித்து பழக்குவதில் இன்று மலசர் பழங்குடிகளே திறமையுடன் பெரும்பாலும் பணியாற்றி வருகின்றனர். சிறப்பான முறையில் யானைகளைப் பராமரித்துவரும் மலசர்களைப் பாராட்டி மத்திய வனத்துறை 'கஜ் கவ்ரவ் - 2022' விருதினை வழங்கியுள்ளது. மலசர் பழங்குடிகளுக்கும் யானைகளுக்குமான பாரம்பரியத் தொடர்பை காட்டுவதாகக் தர்ஸ்டனின் குறிப்பு அமைந்துள்ளது.

பாரதப் பழங்குடிகள் (1983) என்னும் நூலில் எஸ்.ஆர்.வேங்கடராமன், மலசர் பழங்குடிகளின் குடிசை அமைப்பு, திருமண முறை, பழக்க வழக்கங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்துள்ளார். நிலாக்கிழார்கர்கள் மலசர்களின் உழைப்பைச் சுரண்டிய விதத்தினை "பெரிய நிலக்கிழார்கள் மலசரைத் தமது பண்ணையில் கொத்தடிமைகளாக (Bonded Labour) வேலைக்கு அமர்த்திக் கொள்கிறார்கள். ஒருவிதமான வாரமோ குத்தகையோ இன்றி நில உடமைக்காரர்கள் ஒரு மலசனுக்கு வேண்டிய நிலத்தைக் கொடுக்கிறார்கள். அதற்குப் பதிலாக மலசன் நிலச்சுவான் உடைமைக்காரரின் மற்றைய பூமிகளை உழுது சாகுபடி பண்ண வேண்டும். இதில் மலசருக்குப் பல சங்கடங்கள் ஏற்படுகின்றன. பயிரிடும் காலம் மலசருக்கும், நிலச்சுவான்தாருக்கும் ஒன்றுதான். ஆகையால் நிலச்சுவான்தார் முதலில் தன் பூமியைச் சரிவரச் சாகுபடி செய்யும்படி மலசரை நிர்ப்பந்திப்பதும் சகஜம். இதனால் மலசன் அருவடை காலத்தில் தன் பூமியைச் சரிவரக் கவனிக்க முடியாமற் போகிறது" என்று பதிவு செய்துள்ளார் (Venkataraman, 1983).

"மதவிஷயத்தைப் பொறுத்த மட்டில் மலசர் ஹிந்துக்கள்தான்" என்று வேங்கடராமன் மலசர்களின் மதத்தைப் பற்றிக் குறிப்பிடுவது முரணான கருத்தாக உள்ளது (Venkataraman, 1983). நாட்டார் வழிபாட்டு மரபையும் முன்னோர் வழிப்பாட்டு மரபையும் உள்ளடக்கியதாகவே மலசர்களின் வழிபாட்டு முறைமைகள் இருக்கின்றன. பாலின சமத்துவத்தோடு ஆணும் பெண்ணும் பூசை செய்வது, ஆடு மற்றும் கோழிகளைப் பலியிட்டுப் படைப்பது போன்ற செயல்களினால் வழிபாட்டை நிகழ்த்தும் மலசர் பழங்குடிகளின் மீது சமீப காலங்களில் மதக் கலப்பு நிகழ்த்தப்பட்டுள்ளதே அன்றி மலசர்கள் தொன்றுதொட்டு இந்து மதத்தைப் பின்பற்றி வந்தவர்கள் அல்லர்.

கே.ஏ.குணசேகரன், தமிழக மலையின மக்கள் (1994) என்ற நூலில் மலசர் பழங்குடிகளின் இன அறிமுகத்தோடு மலைவாழ் மலசர்கள் பின்பற்றி வருகின்ற சடங்கு முறைகளையும் அவர்களின் கலை உணர்வுகளையும் பதிவு செய்துள்ளார் (Gunasekaran, 1994).

அன்றைய நாளில் மலசர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளான சுகாதார வசதியின்மை, காட்டு இலாக்காவினரின் கெடுபிடி போன்றவற்றை உணர்வுப்பூர்வமாகப் பதிவு செய்ததோடு மலசர் பழங்குடிகளின் சமூகப் பண்பாட்டு வளர்ச்சிக்கு வழிவகுக்கும் ஆலோசனைகளையும் குறிப்பிட்டுள்ளார்.

## மானிடவியல் பதிவுகள்

தமிழகப் பழங்குடிகள் (2007) என்னும் நூலில் பக்தவத்சல பாரதி மலசர் பழங்குடிகள் பற்றி குறிப்பிட்டுள்ளார். பழங்குடிளினூடாக பண்டைய வாழ்வியலைப் புரிந்துகொள்ளும் நுட்பங்களை அறிமுகப்படுத்தியும் பழங்குடி வாசிப்பினூடாக மானுட வாசிப்பை நிகழ்த்த வேண்டுமென அறிவுறுத்தியும் உள்ளார்.

"தமிழ் சமூகத்தின் இன்றைய பண்பாட்டுப் பொருண்மைகள் பலவும் பழங்குடிகளின் பாண்பாட்டிலிருந்தே பெறப்பட்டுள்ளன என்பதை மலசர்களின் இனவரைவியலின் வாயிலாக அறிய முடிகிறது" என்று பக்தவத்சல பாரதி குறிப்பிடும் செய்தி மானிடவியலின் வேர்களை கண்டறியும் சோதனை முயற்சிக்கு வித்திடுகின்றது (Bhakthavatsala Bharathi, 2007).

சமவெளிகளில் வாழ்ந்த மக்கள் மண்ணால் ஆன பாண்டங்களையும் அணிகலன்களையும் பயன்படுத்தி மண்ணோடு பாண்பாட்டை அமைத்துக்கொண்டதைப் போன்று மலைகளில் வாழ்ந்த பழங்குடி மக்கள் மூங்கில் போன்ற மரங்கள் சார்ந்தே பாண்பாட்டை அமைத்துக் கொண்டனர். மலசர் உட்பட பழங்குடிகளின் பயன்பாட்டில் இருந்து வந்த மூங்கிலால் ஆன தண்ணீர் புட்டி (Bamboo water bottle), மூங்கிலால் தயாரிக்கப்பட்ட சமையல் சாதனங்கள், மூங்கில் பிரியாணி (Bamboo Briyani) போன்ற வழக்காறுகள் இன்று பொதுப் பயன்பாட்டிற்கு வந்துள்ள விதங்களை பழங்குடி பண்பாட்டின் தொடர்ச்சியோடு புரிந்து கொள்ள பக்தவத்சல பாரதி வழிகாட்டியுள்ளார் (Bhakthavatsala Bharathi, 2007).

## நாட்டுப்புறவியல் பதிவுகள்

மலசர் பழங்குடிகள் (2011) என்ற நூலில் த.கவிதா, கேரள மலசர் பழங்குடிகளையும் தமிழக மலசர் பழங்குடிகளையும் விரிவாகப் பதிவு செய்துள்ளார்.

மலசர் பழங்குடிகளின் உணவு முறைகள், உடை மற்றும் உறைவிட மரபுகள், தொழில் முறைகள், புழங்குப் பொருட்கள், பழக்க வழக்கங்களும் வாழ்வியல் சடங்குகளும், நம்பிக்கைகள், வாழிபாட்டு முறைகள், மருத்துவ முறைகள், விளையாட்டு வடிவங்கள், வாய்மொழி இலக்கியங்கள் மற்றும் கலை வடிவங்கள் போன்றவற்றைப் பதிவு செய்துள்ளார்.

மலசர் பழங்குடிகளின் பண்பாட்டுத் தொடர்பை சங்க இலக்கியங்களோடு ஒப்பிட்டு விளக்கியுள்ளார். கள ஆய்வில் திரட்டிய வாய்மொழி இலக்கியங்களைத் தொகுத்து ஆவணப்படுத்தியுள்ளார். உதாரணமாக,

"மானத்தை நம்பியாத்தா

மக்களையும் பெத்துவிட்டோம்

மானம் பேயவில்லை

மாநிலமும் செளிக்கவில்லை

மாரி எந்தாயி

மணக்கடவாளே எங்காத்தா

மாய மளை பேய வேணு(ம்)" (Kavitha, 2011)

என்று மழை வேண்டி மழைக்கும்மி கொட்டி மலசர்கள் பாடும் பாட்டை பதிவு செய்துள்ளார். மலசர் பழங்குடிகள் மீன்பிடிக்க ஒடுகந்தழையைப் பயன்படுத்துவது போன்ற சுவாரசியமான செய்திகளைப் பதிவு செய்துள்ளார். பழங்குடிகளிடமிருந்து பழங்குடியியலைப் புரிந்து கொள்வதிலிருந்து விலகி சில இடங்களில் பொதுப்பார்வையையும் புகுத்தியுள்ளார்.

மலசர்களின் உருவ அமைப்பைக் குறிப்பிடும் இரண்டு இடங்களில் பொதுப்பார்வையோடு மேலோட்டமான கருத்துக்களைப் பதிவு செய்துள்ளார். "தினந்தோறும் தலை வாரும் பழக்கம் இல்லை

போலும். அதனால் பலரும் பரட்டைத் தலையராகக் காட்சியளிப்பதைக் காணமுடிகின்றது" என்று ஒரு இடத்திலும், "மலசர்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளுக்கு அருகில் நன்றாகவே தண்ணீர் வசதி இருந்தும்கூட (ஓடை, அருவி, ஆறு, குழாய்நீர், கிணறு) இவர்கள் தினமும் குளிக்கும் வழக்கத்தை மேற்கொள்வதில்லை என்று தெரிந்தது" என்று மற்றொரு இடத்திலும் பதிவு செய்திருப்பது ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்துக்களாக இல்லை (Kavitha, 2011).

எண்ணெய் என்பது மலசர் பழங்குடிகளுக்கு விலை உயர்ந்த பொருளாக இருந்த காரணத்தினால் தலைக்கு எண்ணெய் வைத்துக் கொள்ளும் வசதியான வாழ்க்கையைக் கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் மலசர் பழங்குடிகள் அனுபவிக்கவே இல்லை. கே.ஏ.குணசேகரன் மலசர்களின் உருவ அமைப்பைக் குறிப்பிடுகையில் "எண்ணெய் தேய்க்காத இம்மக்கள் பரட்டைத் தலையுடையோராய் உள்ளனர்" என்று பதிவு செய்துள்ளார் (Gunasekaran, 1994). எண்ணெய் கிடைக்கப்பெறாத காரணத்தாலும் வெயிலில் கடுமையாக உழைப்பதானாலுமே பரட்டைத் தலையுடையவர்களாக மலசர்கள் காட்சியளிக்கின்றனர் என்ற ஆழமான புரிதலில் பொது சமூகம் இயங்கினால் கலைந்த தலைமுடியுடன் இருப்பவர்களை ஆதிவாசிகளின் பரட்டைத் தலையோடு ஒப்பிட்டு கேலி செய்வது, படிக்க வரும் பழங்குடியினக் குழந்தைகளைக் காட்டுவாசி என்றெல்லாம் கேலி செய்து தாழ்வு மனப்பான்மையை உருவாக்குவது போன்ற ஆதிக்க உளவியல் பண்புகள் ஒழிந்து மனிதநேயப் பண்புகள் வளரத் தொடங்கும் என்பதில் ஐயமில்லை.

சில கிராமங்களில் உள்ள மலசர் பழங்குடிகள் பிறந்த குழந்தைகளுக்கு அதிகாலை வேளைகளில் தினமும் அருகம்புற்களில் படிந்துள்ள பனிக்கோர்வைகளை எடுத்துத் தேய்ப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளனர். இவ்வழக்கமானது எண்ணெய் கிடைக்கப்பெறாத காலங்களில் எண்ணெய்க்கு மாற்றாக அதிகாலைப் பனித்துளிகளைப் பயன்படுத்தி வந்ததன் தொடர்ச்சியைக் காட்டுவதாகத் திகழ்கின்றது.

மலசர்கள் அன்றாடம் குளிக்கும் பழக்கமுடையவர்களே. பொது சமூகத்தைப் போல வகை வகையான குளியல் சோப்புக்களைப் பயன்படுத்திக் குளிக்கும் அளவிற்கு இன்றளவும் பல மலசர் குடும்பங்களின் பொருளாதாரம் வளர்ச்சிபெறவில்லை. பல மலசர் குடும்பங்களில் குளியல் அறை வசதியே இல்லாமல் இருக்கின்றது. குடிநீருக்காக அலையும் மலசர்பதிகளும் இருக்கின்ற பட்சத்தில் பொதுவாக மலசர்களின் குடியிருப்புக்கு அருகிலேயே நீராதாரமிருந்தும் மலசர்கள் அன்றாடம் குளிக்கும் வழக்கத்தை மேற்கொள்வதில்லை என்று பதிவு செய்திருப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியாதாக இல்லை.

## சமூகப் பொருளாதார பதிவுகள்

Socio - Economic and Cultural Conditions of The Tribes in The Anaimalai Region [Tamil Nadu] (2008) என்ற ஆய்வேட்டில் P.கார்த்திகா, மலசர் பழங்குடிகளின் பொருளாதார ஆதாரங்கள், சடங்குகள் மற்றும் வழிபாட்டு முறைகள் ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

Social and Economic Conditions of Tribal People in Tamil Nadu - A Study (2017) என்ற ஆய்வேட்டில் M.புனிதவேல் மலசர் பழங்குடிகளின் சமூக நிலையையும் பொருளாதார நிலையையும் குறிப்பிட்டுள்ளார்.

Socio - Cultural Studies of Tribal Communities of Kerala (2018) என்ற ஆய்வுக் கட்டுரையில் வர்கீஸ்.G, கேரள மலசர் பழங்குடிகளோடு தமிழக மலசர் பழங்குடிகளின் பண்பாட்டையும் சுருக்கமாக பதிவு செய்துள்ளார்.

## அறிவியல் பதிவுகள்

Ethnobotony of Malasar Tribes in Topslip Hills, Coimbatore District (2011) என்ற ஆய்வுக் கட்டுரையில் T.வனிதா மற்றும் V.சசி ஆகியோர் மலைவாழ் மலசர் பழங்குடிகள் 44 தாவர இனங்களையும் 39

குடும்பங்களையும் சேர்ந்த 52 தாவர வகைகளை பல்வேறு நோய்களுக்கு மருந்தாகப் பயன்படுத்தி வருவதைக் கண்டறிந்து ஆவணப்படுத்தியுள்ளனர் (Vanitha & Sashi, 2011).

Ethnomedicinal Plant Diversity of Malasar Tribe, Kerala, India (2021) என்ற ஆய்வுக் கட்டுரையில் V.கௌதமி மற்றும் K.H.அமிதாபச்சன் ஆகியோர் கேரள மற்றும் தமிழக மலசர் பழங்குடிகளின் இருப்பிடங்களையும் வாழ்வியலையும் குறிப்பிட்டு கேரள மலசர் பழங்குடிகள் பயன்படுத்துகின்ற மூலிகைத் தாவரங்களைப் பட்டியலிட்டுள்ளனர் (Gouthami & Amitha Bachan, 2021).

## முடிவுரை

மலசர்களின் வாழ்வியலையும் பண்பாட்டையும் இலக்கியப்பூர்வமாக அறிமுகப்படுத்தி வெளிவந்துள்ள பதிவுகளும் ஆய்வுகளும் மலசர் பழங்குடிகளின் வாழ்க்கைத் தரத்தில் எந்த வித மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. மலசர் பழங்குடிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் பண்பாட்டைப் பாதுகாக்கவும் வழிவகுக்கின்ற ஆய்வாக்கங்களில் இடைவெளி (Research Gap) நீடிப்பதை இம்மதிப்பாய்வு உணர்த்துகின்றது. மலசர் மொழி முழுமையாக வழக்கிழந்தால் இயற்கையோடு இயைந்த மலசர் பழங்குடிகளின் அறம்சார் பண்பாடும் அழிய நேரிடும் என்பதால் மலசர் மொழியை ஆராய்ந்து ஆவணப்படுத்தி அம்மொழியை வளர்ப்பதற்கான வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும். மலசர் பழங்குடிகளின் தனித்த பண்பாட்டை சிதைக்காமல் அவர்களின் சமூப் பொருளாதாரத் தரத்தை உயர்த்தக்கூடிய வளர்ச்சித் திட்டங்களைக் கண்டறிந்து செயல்படுத்த வேண்டும்.

## References


Bhakthavatsala Bharathi, (2007) Thamizhakap Pazhankdikal, Adaiyalam, Thiruchirappalli, India

Edgar Thurston, (1909) Castes and Tribes of Southern India, Asian Educational Services, New Delhi, India.

Gouthami, V., Amitha Bachan, K.H, (2021) Ethnomedicinal Plant Diversity of Malasar Tribe, Kerala India, Journal of the Maharaja Sayajirao University of Baroda, 55(1), 148-151.

Gunasekaran, K.A. (1994) Thamizhaa Malaiyina Makkal, New Century Book House, Chennai, India

Kavitha, T. (2011) Malasar Pazhangudikal, Arul Pathippagam, Chennai, India

Vanitha, T., Sashi, V. (2011) Ethnobotony of Malasar Tribes in Topslip Hills Coimbatore District, Palani Paramount Publications, 29(4), 291-298.

Venkataraman, S.R. (1983) Bharatha Pazhamkudigal, Tamil Writes Co-Op. Society Ltd, Madras, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License